ஆண்டு-3 முதல் ஆண்டு-9 வரை சகல பாடங்களும் கற்பிக்கப்படுகின்றன.

புதிய கல்வி நிலையம்
219, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

பக்கங்கள்: நான்கு

Registered as a NewsPaper

# உதயன்

விலை ரூபா 5-00

ஆண்டு-5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கு மாதாந்தப் பயிற்சிப் பரீட்சைகளுடன் நாளாந்த வகுப்புகளும் சனி, ஞாயிறு வகுப்புகளும் நடைபெறுகின்றன.

புதிய கல்வி நிலையம்
219, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

சுடர்: 8 திருவள்ளுவர் ஆண்டு 2025 ஐப்பசி 16 புதன்கிழமை (03 – 11 – 1993) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 338

# வடக்கில் மற்றுமோர் இராணுவ நடவடிக்கை

## விரைவில் மேற்கொள்ள படை அதிகாரிகள் தீவிர முயற்சி

வடக்கில் மற்றுமோர் இராணுவ நடவடிக்கையை விரைவில் மேற்கொள்ளும் முயற்சியில் படை அதிகாரிகள் ஈடுபட்டுள்ளனர் என்று வன்னிப் பிராந்திய இராணுவ அதிகாரிகளை மேற்கோள்காட்டி கொழும்புச் செய்திகள் தெரிவித்தன.

இந்த இராணுவ நடவடிக்கை வடக்கில் எந்தப் பகுதியில், எப்போது ஆரம்பிக்கப்படும் என்பது போன்ற தகவல்களை படை அதிகாரிகள் வெளியிட மறுத்து விட்டனர்.

அநேகமாக தாக்கிவிட்டு மீண்டும் பழைய இடத்திற்கு திரும்பும் வகையான ஒரு இராணுவ நடவடிக்கையே மேற்கொள்ளப்படலாம் என இராணுவ பகுப்பாய்வாளர்கள் நம்புகின்றனர்.

இதேவேளை — வடக்கு-கிழக்கு நெருக்கடியை பயங்கரவாதப் பிரச்சினையாகக் காட்டுவதன் மூலம் தென்பகுதி மக்களின் நம்பிக்கையைப் பெறுவதே ஜனாதிபதி விஜேதுங்காவின் நோக்கமாகும் என்று கொழும்புப் பத்திரிகை ஒன்று தெரிவித்துள்ளது. (ஓ-எ-3)

# புலிகளால் கொழும்புக்கு விரைவில் பேராபத்து!

தற்போது விடுதலைப் புலிகளின் முக்கிய இலக்காக கொழும்பு மாநகர் இருப்பதாகவும்—

மிக விரைவில் பேராபத்து ஒன்று ஏற்படக்கூடும் என்றும்—

எனவே படையினர் மிக விழிப்புடன் இருக்கவேண்டும் என்றும்—

பாதுகாப்பு அமைச்சு முப்படையினருக்கும் பணிப்புரை விடுத்திருக்கிறது.

வெரித்தாஸ் வானொலி இத்தகவலை வெளியிட்டது.

கடந்த வார இறுதியில் கொழும்பில் பொலிஸார் நடத்திய தேடுதல்களின் போது தாக்குதல் அபாயம் பற்றிய தகவல்கள் கிடைத்ததாகவும் கூறப்படுகிறது.

வடபகுதியில் இராணுவத் தாக்குதலில் பாதிப்படைந்த குடும்பங்களைச் சேர்ந்தவர்களுக்கு — இருபாத — குறுகியகால பயிற்சி அளித்து, அவர்களை கொழும்புக்கு அனுப்பி அங்கு தாக்குதல்களை நடத்த விடுதலைப் புலிகள் திட்டம் தீட்டியுள்ளார்கள் என்றும்—

பொய்யான பெயர்களையும் முகவரிகளையும் கொடுத்து விடுதிகளில் தங்கியிருக்கும் இத்தமிழர்கள் காலை முதல் மாலை வரை முக்கிய பிரமுகர்கள் செல்லும் இடங்கள் பற்றிய விவரங்களைச் சேகரிப்பதில் ஈடுபட்டிருந்தனர் என்றும் படையினர் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

இவர்கள் சந்தோளவப் பனடயைச் சேர்ந்தவர்கள் என்றும் —

இவர்களில் குடும்பங்களில் குறைந்தது ஒருவராவது இராணுவ நடவடிக்கையின் போது கொல்லப்பட்டுள்ளனர் என்றும் பொலிஸார் கருதுவதாக தெரிவிக்கப்பட்டது.

### திராவிட முன்னேற்றக் கழகத்தில்

# தலைமைப் பதவி வை. கோவுக்கு! ஒற்றைக்கண் சிவராசன் கூறினார்

சென்னை, நவ. 3

தி.மு.க. தலைமைப் பதவியை கருணாநிதியிடமிருந்து விரைவில் வை. கோபாலசாமி எடுத்துக் கொள்வார் என்று ஒற்றைக்கண் சிவராசன் விடுதலைப் புலிகளின் ஆதரவாளரான சீனிவாச ஐயா என்பவரிடம் கூறினார்.

—இவ்வாறு ராஜீவ்காந்தி கொலை வழக்கு விசாரணையின்போது அரச தரப்பு வழக்கறிஞர் ஜேக்கப் டானியல் நேற்று நீதிமன்றில் தெரிவித்தார்.

சீனிவாச ஐயா என்ற அந்த நபர் யார்? அவரது அடையாள விவரங்கள் என்ன? அவரை அரச தரப்பு நீதிமன்றத்துக்கு அழைத்து வராதது ஏன்? — என்று எதிரி தரப்பு வழக்கறிஞர்கள் கேள்வி எழுப்பினர். (உ-எ)

# நாட்டின் பல பகுதிகளிலும் சித்திரவதைக் கூடங்கள்

## மனித உரிமைகள் பணியகம் கவலை தெரிவிப்பு

நாட்டின் பல பாகங்களிலும் நடத்தப்பட்டு வரும் சட்டவிரோத வதைக் கூடங்கள் குறித்து மனித உரிமைகள் பணியகம் கவலை தெரிவித்துள்ளது.

இவைகளில் பல ஜே.வி.பி. நடவடிக்கைகள் இடம்பெற்ற காலத்தில் ஆரம்பிக்கப்பட்டவையாகும் என்று கூறப்படுகிறது.

கிடைத்துள்ள தகவல்களுக்கு அமைய, இத்தகைய வதைக் கூடங்கள் வவுனியா, மட்டக்களப்பு, தெஹிவத்தைச் சந்தி, பதுளை, தெம்மோதறை முதலான பகுதிகளில் உள்ளன என்று அறியப்படுகிறது.

இவைகளில் சில நடமாடும் வதைக் கூடங்களாக இயங்குவதாகவும் நம்பப்படுகிறது.

தனிப்பட்ட கொலைஞர்களினால் நடத்தப்பட்டு வருவதாகக் கூறப்படும் இவ்வதைக் கூடங்களில் தமிழ் அமைப்புகளின் உறுப்பினர்கள் பெரும்பாலும் தடுத்து வைக்கப்பட்டிருப்பதாகவும் கூறப்படுகிறது. (உ-எ-6)

### குடும்ப அட்டைகள்:

# வெளியே சென்றவர்களின் பெயர்களை பதியவேண்டும்

வடபகுதிக்கு வெளியே வாழும் தமது குடும்ப உறவினர்களின் பெயர்களை குடும்ப அட்டைகளில் பதியாதவர்களை, உரிய முறையில் அவற்றைப் பதிவு செய்யுமாறு போக்குவரத்து கண்காணிப்புப் பிரிவின் குடும்ப அட்டைப் பகுதியினர் அறிவித்துள்ளனர்.

வெளிநாடுகளில் உள்ள திருமணமாகாத குடும்ப உறவினர்களின் பெயர்களைப் பதிவு செய்யாதவர்களும் அவற்றைச் சேர்த்துக் கொள்ளவேண்டும் என்றும்—

திருமணமானவர்கள் தமக்கெனத் தனியான குடும்ப அட்டைகளைப் பெறவேண்டும் என்றும் — குடும்ப அட்டைப் பகுதியினர் மேலும் தெரிவித்துள்ளனர்.

மேற்கூறிய விவரங்களை பதிவு செய்யக்கூடிய குடும்ப அட்டைச் செயலகங்கள் பற்றிய விவரமும் அறிவிக்கப்பட்டுள்ளது. (அந்த விவரம் நாளைய உதயனில் வெளி வரும்)

# சர்வசன வாக்கெடுப்பு அடுத்தவருட முற்பகுதியில்

கொழும்பு, நவ. 3

வடக்கு - கிழக்கு இணைப்புக் குறித்து கிழக்கு மாகாணத்தில் அடுத்த வருட முற்பகுதியில் சர்வசன வாக்கெடுப்பு ஒன்றை நடத்த தேர்தல் திணைக்களம் தற்சமயம் நடவடிக்கைகளை எடுத்துவருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பான உத்தியோகபூர்வ அறிவித்தல் அரசாங்கத்தினால் விரைவில் வெளியிடப்படவிருப்பதாக கொழும்புச் செய்திகள் தெரிவித்தன. (உ-6)

# அரசு போரில் தோல்வியுறும் சிங்களவர் கருத்து இதுவே!

## சுதந்திரக் கட்சி எம்.பி. கூறுகிறார்

கொழும்பு, நவம்பர் 3

இராணுவத்தின் பலம் போதாது. இராணுவத் தளபதிகள் சக்தியற்றவர்கள். ஐக்கிய தேசியக் கட்சி மீதோ, ஜனாதிபதி விஜேதுங்க மீதோ மக்களுக்கு நம்பிக்கையில்லை. எப்போது இந்த யுத்தம் தோல்வியுறும் என்ற எண்ணம் தான் மக்கள் மத்தியில் நிலவுகின்றது.

— இவ்வாறு கூறினார் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி எம்.பியான எஸ்.பி. திசநாயக்கா.

வெரித்தாஸ் வானொலிக்கு அளித்த பேட்டியில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

யாழ்தேவி இராணுவ நடவடிக்கையில் விடுதலைப் புலிகளுக்கு ஏற்பட்ட இழப்புகளிலும் பார்க்க இராணுவத்தினரே அதிக இழப்புக்களைச் சந்தித்தனர்.

இனப்பிரச்சினைக்கு இராணுவத் தீர்வு பட்டும் போதுமானதல்ல. இக்கருத்தை யே.சு.கவும் ஏனைய அமைப்புகளும் கொண்டுள்ளன.

தீவிர சிங்கள இனவாதிகளைத் தவிர்ந்த ஏனைய சிங்களவர்களும் தமிழர்களும் இப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வே காணப்பட வேண்டும் என்று கூறுகின்றனர்.

(4 ஆம் பக்கம் பார்க்க)

### ஹெலித்தாக்கு

கிளாலிப் பகுதியில் ஸ்ரீலங்காவின் ஹெலிக்கொப்டர் ஒன்று நேற்று மாலை 5.30 மணியில் இருந்து சுமார் 10 நிமிட நேரம் வேட்டுக்களைத் தீர்த்தது.

அதேவேளை – நேற்று பிற்பகல் 3.30 மணியளவில் ஆனையிறவு முகாமில் இருந்து கிளாலிப் பகுதியை நோக்கி ஷெல் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. (த-117)

### சிப்பாய் பலி

யாழ்ப்பாணம், நவ. 3

வவுனியா பழைய ஸ்ரீலங்கா முகாமின் எல்லைக் காவலரணில் மின்சாரம் தாக்கி இராணுவ சிப்பாய் ஒருவர் உயிரிழந்தார்.

## கொழும்பில் தமிழர் மீது கெடுபிடி!

# மனித உரிமைகள் கூட்டமைப்பும் ஸ்ரீலங்கா அரசு மீது பாய்ச்சல்!

யாழ்ப்பாணம், நவ. 3

கொழும்பிலும் அதன் சுற்றுப் புறங்களிலும் வசிக்கும் தமிழர்கள் மீது ஸ்ரீலங்கா அரசுப் படைகள் மேற்கொள்ளும் பெரும் கெடுபிடிகளை மனித உரிமைகளுக்கான கூட்டமைப்பும் கண்டித்துள்ளது.

கடந்த மாதம் 15 ஆம் திகதியிலிருந்து ஸ்ரீலங்காப் படைகள் தொடர்ச்சியான சுற்றிவளைப்பு மற்றும் தேடுதல்களை மேற்கொண்டு தமிழர்களைக் கைது செய்து மக்களைக் கலக்கமுறச் செய்வதாக அந்த அமைப்பு விடுத்துள்ள கண்டன அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இக்கூட்டமைப்பில் 17 மனித உரிமை அமைப்புகள் அங்கம் வகிக்கின்றன.

தமிழர் கைது செய்யப்படுதல், தடுத்து வைக்கப்படுதல் போன்றவற்றை எவ்விதத்திலும் அங்கீகரிக்க முடியாது என்றும்—

இத்தகைய சம்பவங்கள்

(4 ஆம் பக்கம் பார்க்க)

# வாந்திபேதிக்கு இதுவரை 12 பொதுமக்கள் பலி!

யாழ்ப்பாணம், நவ. 3

யாழ். மாவட்டத்தில் அண்மைக் காலத்தில் 'கொலரா' (வாந்திபேதி) நோயினால் 12 பேர் உயிரிழந்துள்ளனர்.

நேற்று யாழ். ஆஸ்பத்திரியில் இராசையா செல்லம்மா (வயது 76) என்ற வயோதிப மாது உயிரிழந்தார். இவர் சண்டிலிப்பாயைச் சேர்ந்தவர்.

பாதுகாப்புக் கருதி இவரது சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்படாமல் ஆஸ்பத்திரியிலிருந்து நேரடியாக மயானத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு அங்கு தகனம் செய்யப்பட்டது. (உ-15)

# போக்குவரத்து விதிகளை கடைப்பிடிக்க வலியுறுத்து

## காவல்துறைப் பொறுப்பாளர் கோரிக்கை

வீதிகளில் சைக்கிள்களில் செல்பவர்கள் விபத்துக்களைத் தவிர்க்கும் வகையில் வீதிப் போக்குவரத்து விதி முறைகளை நடைமுறைப்படுத்த ஒத்துழைக்க வேண்டும் என தமிழீழ காவல்துறை பொறுப்பாளர் திரு. பா. நடேசன் வேண்டுகோள் விடுத்திருக்கிறார்.

ஸ்ரீலங்கா அரசின் பொருளாதாரத் தடையால் எமது பிரதேசத்தில் சைக்கிள்களின் பாவனை அதிகரித்துள்ளது.

இவ்வேளையில் சைக்கிள்களில் பக்கம் பக்கமாகவும், ஒருவருடன் ஒருவர் கைகோத்தபடியும் செல்வதால் பல விபத்துக்கள் ஏற்படுகின்றன. இதனால் உயிராபத்துக்களும் நேருகின்றன.

— இவ்வாறு அவர் சுட்டிக் காட்டியுள்ளார். (உ-த)

### ஆசிரியர் பதவி வெற்றிடம்:

# கல்வி அலுவலகத்தில் நேற்று கூட்டம் அலை மோதியது

யாழ்ப்பாணம், நவ. 3

யாழ். மாவட்டத்தில் ஆசிரியர் பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்காக, அப்பதவிக்கு விண்ணப்பித்தோரின் விவரங்கள் திரட்டப்படுவதாக அறிவிக்கப்பட்டதை அடுத்து—

பெரும் எண்ணிக்கையானோர் தமது விவரங்களைச் சமர்ப்பிப்பதற்காக நேற்று யாழ். கல்வித் திணைக்களத்தில் முண்டியடித்தனர்.

இது தொடர்பாக கல்வி அலுவலகத்தால் அச்சிடப்பட்ட ஆயிரத்து ஐந்நூறு பத்திரங்கள் நேற்றே விநியோகிக்கப்பட்டு முடிவடைந்துவிட்டன. அந்தப் படிவங்கள் கிடைக்காதோர் வேறு இடங்களில் படிவங்களைப் பெற்று நிரப்பிக் கொடுத்தனர்.

விவரங்களை இன்று மட்டுமே சமர்ப்பிக்கலாம் எனத் தெரிவிக்கப்பட்டது. (உ-3)

# யுனிசெவ் பிரதிநிதிகள் பலருடன் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், நவ. 3

கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் வந்துள்ள யுனிசெவ் பிரதிநிதிகள் நேற்று அரசாங்கத் திணைக்களங்கள் பலவற்றுக்கும் அரச, சார்பற்ற நிறுவனங்களின் இணையத்துக்கும், மாநகரசபைக்கும் சென்று அதிகாரிகளுடன் பேச்சு நடத்தி இங்குள்ள நிலைமையை அறிந்துகொண்டனர்.

நகரில் பாதிக்கப்பட்ட இடங்களையும், கரையோரப் பகுதிகளில் வாழும் மக்களின் சுகாதார நிலைமைகளையும் அவர்கள் நேரில் பார்வையிட்டனர்.

சுகாதாரத் திணைக்களத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலில் குடாநாட்டின் சுகாதார மற்றும் வைத்தியசேவை சம்பந்தமான நிலைமைகள் குறித்து ஆராயப்பட்டது.

கல்வித் திணைக்களத்தில் நடைபெற்ற கலந்துரையாடலில், மாணவர்களின் கல்வி நிலை பாதிப்பு, பல்கலைக்கழக அனுமதியில் பாதிப்பு, பாடசாலைகளின் வசதியின்மை என்பன குறித்து எடுத்து விளக்கப்பட்டது.

மாநகரசபையில் நீர் விநியோகத் திட்டம் குறித்தும் அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத்தில் குழந்தைகள் எதிர்நோக்கும் பிரச்

(4 ஆம் பக்கம் பார்க்க)

# யாழ். பல்கலை மாணவர் பிரதிநிதிகள் கொழும்புக்கு!

## ஆணைக்குழு முன் சாட்சியமளிப்பர்

பல்கலைக்கழக அனுமதி முறையில் மேற்கொள்ளப்பட வேண்டிய மாற்றங்கள் குறித்து ஆராய நியமிக்கப்பட்டுள்ள ஆணைக்குழுவின் முன் சாட்சியமளிப்பதற்காக யாழ். பல்கலைக்கழக மாணவர் அமைப்புகளின் குழு ஒன்று நேற்று கொழும்பு புறப்பட்டுச் சென்றது.

பல்கலைக்கழக அனுமதி முறை எதிர்காலத்தில் எவ்வகையில் அமைய வேண்டும் என்பது குறித்து யாழ். பல்கலைக்கழக மாணவர்களின் அபிலாஷைகளை இந்தக்குழு தெரிவிக்கும்.

எதிர்வரும் 6 ஆம் திகதி ஆணைக்குழு முன் யாழ். பல்கலைக்கழக மாணவர்கள்குழு சாட்சியமளிக்கும்.

யாழ். பல்கலைக்கழக மாணவர் மன்றங்களின் ஆறு பிரதிநிதிகள் இக்குழுவில் அங்கம் பெறுகிறனர்.

கொழும்பு சென்றுள்ள இக்குழுவினர், பல்கலைக்கழக அனுமதி முறையில் தமிழ்மக்களுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்பு குறித்து ஜனாதிபதி, அமைச்சர் தொண்டமான், உயர்கல்வி அமைச்சர் ஆகியோரை சந்தித்து விளக்க முயற்சி எடுப்பர். (உ-3)

> யுத்தத்தின் சத்தங்கள் கதவடியில் — ஏன் உட்கார்ந்து இருக்கின்றாய் மதவடியில்? எச்சில் சுமப்பவன் மனிதனல்ல — வந்த எதிரியை விடுபவன் தமிழனல்ல.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மந்திகை திருவருள்மிகு கண்ணகை அம்மன் கோயில்

## மகா கும்பாபிஷேக சிறப்புமலர்

(03 . 11 1993)


கண்ணகையே தாயே
... வல் ... பயே
உந்தன் கும்பாபிஷேக நாள் ... திருநாளாகும்

நியாய விலையில் சகல விதமான சைக்கிள்கள், சைக்கிள் உதிரிப்பாகங்கள்
பெற்றுக் கொள்ள நாடுங்கள்

**வே. மனோகரன்**

(கூட்டுறவுச் சங்க இரும்புக் கடை அருகில்)
மந்திகை. புலோலி.

**புலோலி கல்வி நிலையம்**
(P- E- C-)
புலோலி.
நிர்வாகி, ஆசிரியர்கள், மாணவர்கள்.

சிறந்த சித்திர வேலைகள், திரைச் சேலை வரைதல், வர்ணம் தீட்டுதல்,
படம் பிறேம் போடுதல் வேலைகளுக்கு

**கிருஷ்ணா ஓவியங்கள்**
(பழைய பஸ் நிலையத்தடி)
பிரதான வீதி. பருத்தித்துறை.

நியாய விலையில் தரமான பொருள்களை பாவனையாளர்
பெற்றுக் கொள்ள நாட வேண்டிய ஸ்தாபனம்:

**புலோலி பலநோக்கு கூட்டுறவுச் சங்கம்**
புலோலி கிழக்கு. [illegible]

**கணேஸ் ஸ்ரோர்ஸ்**
(உரிமையாளர் கே. வி. கணேசராசா
பலசரக்கு வியாபார மாளிகை
மந்திகை. புலோலி.

✲ சைக்கிள் வகைகள், ✲ சைக்கிள் உதிரிப்பாகங்கள்
மற்றும் பொருள்களுக்கு

**பரந்தாமன் சைக்கிள் ஸ்ரோர்ஸ்**
பரு. யாழ். [illegible]
மந்திகை. [illegible] புலோலி.

✲ சகலவிதமான அலங்காரப் பொருள்கள்
✲ பாடசாலை உபகரணங்களுக்கு

**அகிலாஸ் பான்ஸி ஹவுஸ்**
மந்திகை, புலோலி.

சகலவிதமான கலர் போட்டோ பிரதிகளுக்கும், வீடியோ படப்பிடிப்பிற்கும்
சிறந்த முன்னணி ஸ்தாபனம்

**திரு வீடியோ விஷன்**
மூர்த்த விநாயகர் கோவிலடி,
கரணவாய், [illegible]


## கண்ணகி வரலாறு

இறைவியின் திருவருட் சக்தி தேமாங்கனியாகத் தோன்ற, பாண்டியன் அதனைப் பறித்து பாதுகாத்து வைக்க அது பெண் குழந்தையாக மாறியது. மன்னன் குழந்தை பிறந்த பலனைச் சாதகர்களிடம் கேட்கிறான். ஆராய்ந்து அறிந்த சோதிடன் இப்பிள்ளை தாய் தகப்பனைக் கொல்லும், நாட்டை எரிக்கும் என்று கூறினான்.

மன்னன் மகளை பேழையில் வைத்து கடலில் விட்டு விட்டான். மானாக்கன் என்னும் வணிகன் பேழையை எடுத்து குழந்தையை வளர்த்து வருகிறான். குழந்தைக்கு கண்ணகி எனப் பெயர் சூட்டப்பட்டது.

குழந்தை வளர்ந்து பருவம் எய்துகிறது. மாசாத்தன் என்னும் வணிகனது மகன் கோவ



லனுக்கு கண்ணகியை மணம் முடித்து வைக்கிறார்கள்.

(4ஆம் பக்கம் பார்க்க)

## அருள் புரிவாய் அன்னை கண்ணகையே!

மந்திகைப் பதியில் பல்லாண்டு காலமாக எழுந்தருளியிருந்து அருள்புரியும் ஆதி கண்ணகைத் தாயின் ஆலயத்தை புனருத்தாரணம் செய்து சம்புரோட்சண மகாகும்பாபிஷேகம் இன்று நடைபெறத் திருவருள் பாலித்துள்ளது.

இந்த ஆலயத்தில் முப்போது திருமேனி தீண்டி அர்ச்சனை வழிபாடுகளைச் செய்யும் சிவாச்சாரியருக்கும், ஆலய பரிபாலகர்களுக்கும், மெய்யடியார்களுக்கும் நாட்டு மக்கள் எல்லோருக்கும் நீண்ட ஆயுளும், குறைவற்ற செல்வமும், சகல சௌபாக்கியங்களும் உண்டாக அருள்புரிவாய் அன்னை கண்ணகையே!

சிவஸ்ரீ. வை. சுந்தரேஸ்வரக் குருக்கள்
(பிரதம குரு. மந்திகை கண்ணகை அம்மன் தேவஸ்தானம்)

## மந்திகை கண்ணகை அம்மன்

கண்ணகையின் இந்த ஆலயம் நான்கு நூல்முறைகளுக்கு முற்பட்டது. இந்த ஆலயத்திலே ச. குமாரசுவாமிக் குருக்கள் என்னும் சிவாசாரியர் 1926 ஆம் ஆண்டளவில் தொண்டு செய்து வந்தார். அவரது காலத்திலே ஓர் ஆலமரத்தின் கீழ் சிறு குடிலில் இரண்டு சிலம்புகளை வைத்து வழிபாடுகள் செய்து வந்தார்கள்.

பின்னர், 1967ஆம் ஆண்டளவில் கருங்கல்லில் கண்ணகி சிலை சிற்பாசாரியார் பெரியசாமி அவர்களால் செய்யப் பெற்று கும்பாபிஷேகம் செய்யப்பட்டது. அந்தக் கும்பாபிஷேகம் அடியேனால் நடாத்தப்பட்டது. அதன் பின்பு பல வகையிலும் வளர்ச்சி பெற்று இப்பொழுது கும்பாபிஷேகம் நடைபெறுகிறது.

க. சிவபாதசுந்தரக்குருக்கள்
(சர்வபோதகாசிரியர், கிரியா வித்தகர் குருமணி.
கட்டுவன் ஐயப்பசுவாமி தேவஸ்தானம்)

**மலர் ஆக்கம்:**
எஸ். பி. நந்தன்.
வடமராட்சி உதயன் செய்தியாளர்.


புலோலி பருத்தித்துறை
தென்மராட்சி உற்பத்திக் கிராமசங்கம்
ஈ.பி.வி. (மக்கள்) லிமிடெட்
தும்பளை வீதி, பருத்தித்துறை.

சகலவிதமான வைபவங்களிலும்
★ கலர் ★ கறுப்பு வெள்ளை
புகைப்படம் பிடிப்போர்
✲ சாந் போட்டோ ✲
மாயக்கை, தம்பசிட்டி, பருத்தித்துறை.

மந்திகைத் தாயே கண்ணகையே! எம் அனைவருக்கும்
அருள் பாலித்து ஈடேற்ற வேண்டுகிறோம் அன்னையே!

**ஜானகி ஸ்ரோர்ஸ்**
பல்பொருள் விற்பனையாளர்
ஆஸ்பத்திரி முன்பாக,
மந்திகை. புலோலி.

★ அலங்காரப் பொருள்கள் ★ பாதணிகள்
மற்றும் பொருள்களுக்கு

**மதுசூதனன் அழகு சாதன அங்காடி**
வல்லிபுர ஆழ்வார் வீதி, நாற்சந்தியடி,
மந்திகை. புலோலி.

● ஆங்கில மருந்து வகைகள் பெற்றிட ●
**பிள்ளையார் மருந்துச்சாலை**
ஆஸ்பத்திரி முன்பாக,
மந்திகை, புலோலி.

தரம் மிக்க
★ பாண் ★ பணிஸ் ★ கல்பணிஸ்
★ கேக் வகைகளுக்கும்
**கமலின் பேக்கரி**
வியாபாரிமூலை, பருத்தித்துறை.

சுத்தமான உணவு சிற்றுண்டி, உணவு வகைகளுக்கு
**பரந்தாமன் ஹோட்டல்**
(ஆஸ்பத்திரி முன்பாக)
மந்திகை. புலோலி.

✲ ந. ஜீவகணேசன் ✲
(கண்ணன்)
மோட்டார் சைக்கிள் திருத்தகம்
சாவகச்சேரி வீதி.
மந்திகை, புலோலி.

● பாடசாலை உபகரணங்கள்
● சாய்ப்புச் சாமான்கள்
விற்பனையாளர்
**நாவலர் புத்தகசாலை**
கந்த முருகேசனார் சிலையடி, புலோலி.

தையல் வேலைகளுக்கு.....
**ஆனந்தா ரெயிலரிங்**
பருத்தித்துறை யாழ். வீதி,
சாரையடி, புலோலி.

சகல விதமான மணிக்கூடுகளை
திருத்திக் கொடுப்பவர்கள்
**சங்கர் வாச் வேக்ஸ்**
மந்திகை, புலோலி.

வாகன டயர்கள் ஒட்டு வேலைகளுக்கு
**சென்றல் ரயர் வேக்ஸ்**
யாழ். வீதி, மந்திகை.

✲ பாரதி ஜூவலர்ஸ் ✲
பிரபல புடவை மாளிகை
இல. 122, பிரதான வீதி, பருத்தித்துறை.

(விளம்பர இல: சி-6307.


## சின்னஞ்சிறு விளம்பரம்


### தேவை

நல்ல குடும்பத்தைச் சேர்ந்த விவாகமாகாத பெண் தங்குவதற்கு யாழ். நகர்ப்பகுதியில் அறை தேவை. நல்லூர் விரும்பத்தக்கது. சைவ உணவு கொடுக்க முடியுமா என்பதையும் தெரிவிக்கவும் இல: 919, மே/பா உதயன்.
(6576)

மதுப்பழக்கமற்ற, நம்பிக்கை, நாணயமுள்ள இருபது வயதிற்குட்பட்ட வரவேற்பாளர் உடன் தேவை. நற்சாட்சிப்பத்திரத்துடனும், உறுதிப்படுத்தும் ஒருவருடனும் நேரில் வரவும். ஆ. சி. தமிழ்ச்செல்வன், இல. 812C, பருத்தித்துறை வீதி, நல்லூர் முத்திரைச்சந்தை, யாழ்ப்பாணம்.
(27860)

### வரலாறு-சமூகக்கல்வி

ஆண்டு 10, 11 வரலாறு-சமூகக்கல்வி வினா-விடைகள் விற்பனையாகின்றன. O/L பரீட்சைக்கு மாணவர்கள் தாமாகவே மீட்டல் செய்யவும், விடையளிப்பதற்கு தயாராகவும் ஏற்றவை. ஆக்கம்: நா. மயில்வாகனம்.
(27869)

### வினாத்தாள் (ஆண்டு3, 4)

07-11-93 ஞாயிறு வெளியிடவிருந்த ஆண்டு3, ஆண்டு 4 புலமைப்பரிசில் மாதிரி வினாத்தாள் 06-11-93 சனி வெளியிடப்படும். 06-11-93 சனி பெற்றுக்கொள்ளலாம். புதிய கல்வி நிலையம், இல: 219, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
(27870)

### பாலராசிரியர் பயிற்சி

பாலர் ஆசிரியராகப் பயிற்சி பெற க. பொ. த. (சா/த) கடைசித் தகைமையாகும். வகுப்பில் கற்க முடியாதோர், தபாலிலும் கற்கலாம். பாலர் ஆசிரியர் சங்கம், உயர்கலைக் கல்லூரி, 73, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
(27354)

### O/L வினா - விடை 93

கணிதம், ஆங்கிலம், விஞ்ஞானத்தில் பௌதிக இரசாயனப் பிரிவுகள் துரித மீட்டல் முறைப்படி அனுபவமுள்ள B.Sc. (Cey.) ஆசிரியரால் கற்பிக்கப்படும். தேவைப்பட்டால் மாலை 6—8 வரை ஏற்பாடுகள் உண்டு. இல. 85, சிவன்கோவிலடி, திருநெல்வேலி.
(27841)

### விற்பனைக்கு

நல்ல இனஅழகான பொமனேரியன் (Black Masked Lion Pomenarian) குட்டிகள் ஆறு கிழமைகள் முடிவடைந்து, பூச்சி அகற்றப்பட்டன. விற்பனைக்குண்டு. இல: 179, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (மனோகரா தியேட்டருக்கு சமீபமாக)
[27868]

### காணி விற்பனைக்கு

கண்டிக்குளி, கொழும்புத்துறை றோட்டில் கச்சேரி, தனியார் பாடசாலைகளுக்கு அண்மையில் 1½ பரப்புக் காணி மூன்று பக்க மதில், கிணற்றுடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: K. சிவசுப்பிரமணியம், ஓய்வுபெற்ற விரிவுரையாளர், பலிக்கர் ஒழுங்கை திருநெல்வேலி.
(27864)

### இலவச திருமண சேவை

30 வயது, பூரட்டாதி, செவ்வாய் 12, பிராமணிஒழுங்கை மணமகளுக்கு ஏற்ற மணமகன் தேவை. இலங்கையில் திருமணம் செய்து அழைக்கலாம். மணமக்களுக்கான தொடர்பு: ஞாயிறு காலையில்து. விமலா, இலவச திருமண சேவை, நாச்சிமார் கோவிலடி.
(27...)

### தவறிவிட்டது

கடந்த 28ஆம் திகதி பிற்பகல் மீசாலைக்கும் நுணாவில் சந்திக்குமிடையில் எனது கைச்சங்கிலி (1பவுணுக்கு 3மஞ்சாடி குறைவு) தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் நாகராசா உருத்திரா தேவி, சியாமளா வீதி, மீசாலை வடக்கு புத்தூர் சந்தி எனும் முகவரியில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.
(சி/6305)

28 10-93 அன்று ஆனைக்கோட்டைக்கும் யாழ். பெரியாஸ்பத்திரிக்கும் இடையில் 350701540V இலக்க அடையாள அட்டை, ஸ்ரூக்குக் கண்ணாடி, கிளினிக் கொப்பி, சிறுதொகைப் பணம் அடங்கிய நீல நிற தோல்பை தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து அறிவிக்கவும்: எம். செபஸ்தியாம்பிள்ளை, சங்கானை மேற்கு, பண்டத்தரிப்பு.
[27876]

### வீட்டுத்தோட்டப் போட்டி

ஆரோக்கியமான பயிர்கள் சிறந்த விளைச்சலைத்தரும். பயிர்கள் ஆரோக்கியமாக வளர்ந்து பயன்தரச் 'சக்தி' இயற்கைப்பசளை(கூட்டெரு) பயிர்களைப்பச்சி, புழுக்களிலிருந்து பாதுகாத்து விளைச்சலைப் பெருக்க 'நீமியா உரம்' இரண்டும் கிடைக்கிறது. 'லங்கம்', மின்சார நிலைய வீதி, 'மில்க்வைற்'
(சி/6303)

### திருத்தவேலைகள்

உத்தரவாதத்துடன் மணிக்கூடுகள், றேடியோக்கள் திருத்தப்படும். உதிரிப்பாகத்திற்காக மணிக்கூடுகள் வாங்கப்படும். டில்கா வாச் & றேடியோ வேக்ஸ், 284, ஸ்ரான்லி றோட் (வானவில் அருகில்). கிளை: கண்டி றோட், சாவகச்சேரி.
(சி-6176)


### கொழும்பில் 10 பேருக்கு நேர்முகப்பரீட்சை

யாழ்ப்பாணம், நவ. 3

இலங்கை திட்டமிடல் சேவை-வகுப்பு 2, தரம் 2 பதவிக்கான போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்த 10பேர் [illegible] கொழும்புக்கு அழைக்கப்பட்டுள்ளனர்.

இந்த நேர்முகப் பரீட்சை எதிர்வரும் 8ஆம் திகதி காலை 9மணிக்கு கொழும்பு திறைசேரி கட்டடத்தில் நடைபெறவிருப்பதாக கொள்கை திட்டமிடல் செயற்படுத்தல் அமைச்சின் செயலாளர் அறிவித்துள்ளார். (ஒ-3)


## பதவி வெற்றிடம்

தென்மராட்சியில் இயங்கும் நிறுவனத்துக்கு பின்வரும் பதவிகளுக்கான வெற்றிடங்களுக்குத் தகுதியும் தகைமையும் உள்ளோர் சுயமாகத் தயாரிக்கப்பட்ட படிவங்களில் விண்ணப்பிக்கவும்.

I 1. இலத்திரனவியல் பொறியியலாளர்கள்
2. தொலைத் தொடர்பு பொறியியலாளர்கள்
3. கணணி இயந்திரவியல்-பொறியியலாளர்கள்
4. கணணி திட்டமிடல் பொறியியலாளர்கள்
5. தொழில்நுட்பவியலாளர்கள்

II விரிவுரையாளர்கள்
1. இலத்திரனியல்
2. கணணி
3. பொறியியல் பட வரைஞர்

விண்ணப்ப முடிவு திகதி: **26 - 11 - 1993**

விண்ணப்பிக்கும் முகவரி:

**VIMALAS**
No: 9 - 15, Modern Market,
Chavakachcheri
(27878)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உதயன்**

## அரசின் நெடுங்கண்

மட்டக்களப்பு மாவட்டத்தில் மாதுறு (மதுறு) ஓயாத் திட்டத்தின் கீழ் அடுத்த வருடத்தில் பாரிய குடியேற்றம் மேற்கொள்ளப்படும் என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா மிக இறுமாப்புடன் அறிவித்துள்ளார்!

மதுறு ஓயா என்பது மாந்தரை ஆறு என்பதன் சிங்கள மாற்று வடிவம். மதுறு என்றால் சிங்களத்தில் நுளம்பு என்று அர்த்தம்.

வளம் மிக்க கிழக்குப் பிரதேசத்தின் - தென் தமிழீழத்தில் - இரண்டு மாவட்டங்களில், சிங்கள அரசுகளின் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றம் தாராளமாக நடந்து விட்டது; நடந்தும் வருகிறது. ஒரு மாவட்டம் - மட்டக்களப்பு - மட்டுமே சற்றுப் பின்னால் உள்ளது. அதனாலேயே இப்போது சிங்களப் பேரினவாதத்தின் நெடுங்கண் அங்கேயே தொடர்ந்து விழுகிறது.

மதுறு ஓயாவின் தென் பகுதியில் மூவாயிரத்து இருநூறு குடும்பங்கள் மீளக் குடியமர்த்தப்பட்டு வருகின்றன; அந்த வேலை முடிந்ததும் ஆற்றின் வலது கரையில் பதினான்காயிரம் ஹெக்டேர் நிலப்பரப்பில் மிகமிகப் பெரிய குடியேற்றம் அடுத்த வருடம் நடக்கப் போகிறது.

அபிவிருத்தி, வேலை வாய்ப்பு, பொருளாதார மேம்பாடு, மக்களின் வாழ்க்கை நிலையை உயர்த்துதல் என்ற போர்வைகளில் குளங்களையும், ஆறுகளையும் அண்டி நீர்ப்பாசனத் திட்டங்கள் ஆரம்பிக்கப்படுகின்றன. தமிழர் மண்ணில் அபிவிருத்தி என்றால் சிங்களக் குடியேற்றங்களை நடத்துவது என்பதே சிங்கள அரசுகள் வகுத்துள்ள வரைவிலக்கணம்.

கடந்த நாற்பத்தைந்து வருடங்களில் அந்த வரைவிலக்கணம் வழுவாமல், தமிழர் பிரதேசங்கள், சிங்களவர்களின் குடியிருப்புகளாக மாற்றப்பட்டிருப்பதை கண்ணாரக் காண்கிறோம்.

பட்டிப்பளை ஆறு, கும்புக்கன் ஆறு, பன்னலை ஆறு, வில் ஆறு, இறக்காமம் குளம் ஆகியவற்றினை அண்டிய நீர்ப்பாசன அபிவிருத்தி, அம்பாறை மாவட்டம் என்ற புதிய சிங்கள மாவட்டத்தைக் கிழக்கில் உருவாக்கியது! அங்கே குமணை, உகந்தை, பாணமை ஆகிய பழந்தமிழ்ப் பிரதேசங்கள் சிங்களவர்களின் வாழ்விடங்களாகி மாறித் தமிழர் கைகளில் இருந்து பறிபோய் விட்டன.

கந்தளாய்க் குளம், அல்லைக் குளம், முதலிக் குளம், யான் ஆறு ஆகிய நீர்ப்பாசனத் திட்டங்களும் மற்றும் பிறவும் திருகோணமலையில் சிங்களவர்களின் இலவிகிதாசாரம் தமிழர்களின் எண்ணிக்கையை அண்மிப்பதற்கு வகை செய்தன. சேருவில என்ற தனிச் சிங்களத் தொகுதியை உருவாக்கின.

மகாவலிகங்கையை மாந்தரை ஆற்றுடன் இணைக்கும் நீர்ப்பாசன அபிவிருத்தித் திட்டம் செங்கலடி, பாலமடு, வாழைச்சேனை, கற்குடா ஆகிய தமிழர் பிரதேசங்களில் சிங்களவரை குவிக்க வகை செய்யும். அறுகன்குளம், உன்னிச்சைக்குளம் ஆகியவற்றையும் ஒரு கை பார்த்தால், மட்டக்களப்பு, பட்டிருப்பு தொகுதிகள் கூட தமிழ் பேசும் மக்களின் தனிப் பிரதேசங்கள் என்ற நிலையை மாற்றிவிடும்.

இவ்வாறு கிழக்கினை சிங்களப் பிரதேசமாக்கிவிட்டால் தமிழர் தாயகம் என்ற கோட்பாட்டைச் சுக்கு நூறாக்கி விடலாம் என்பதே உள்ளார்ந்த திட்டம்.

தமிழர் பிரச்சினையைப் போக்குவதற்கு தமிழர்களைக் கொல்வதே தீர்வு. அதே போல தமிழர் தாயகக் கோட்பாட்டை இல்லாமற் செய்ய தமிழர் பிரதேசங்களை சிங்களவர் குடியிருப்புகளாக மாற்றுவதே தீர்வு.

இந்த இரண்டு தீர்வுகளையும் மனதில் வைத்தே சிங்கள அரசுகள் தமிழர் பிரச்சினைக்கு உகந்த தீர்வு ஒன்றைக் காணாமல் ஏதேதோ எல்லாம் பேசி வருகின்றன. வாய்மாலம் போடுகின்றன!

# காஷ்மீரில் ஐ. நா. படை நிறுத்தப்பட வேண்டும்

### 4 பிரிட்டிஷ் எம். பிக்கள் கோரிக்கை

லண்டன், நவ. 3

காஷ்மீரில் இருந்து இந்திய இராணுவம் விலக்கப்பட வேண்டும் என்றும் — ஐ. நா. கட்டுப்பாட்டின் கீழான இராணுவம் காஷ்மீரின் இரு பகுதிகளிலும் பணிபுரிய வேண்டும் என்றும்— நான்கு பிரிட்டிஷ் எம். பிக்கள் கோரியுள்ளனர்.

இதனை லண்டனில் உள்ள இந்தியத் தூதர் திரு. சிங்வே கண்டித்துள்ளார்.

பிரிட்டிஷ் எம். பிக்களின் கருத்து இந்திய உள்விவகாரங்களில் தலையிடுவதாக உள்ளதெனவும் அவர் கூறியுள்ளார்.

இதற்கிடையில் காஷ்மீர் ஹஸ்ரத்பால் மசூதி முற்றுகை தொடர்கிறது.

மசூதிக்குள் உள்ள முஸ்லிம் தீவிரவாதிகளைச் சரணடைய வைக்கும் முயற்சிகள் இதுவரை வெற்றிபெறவில்லை. (இ-எ 6)

### பாகிஸ்தான் ஜனாதிபதித் தேர்தல்:
## மக்கள் கட்சியின் ஆதரவை நாடும் குலாம் இஷாக்கான்

இஸ்லாமபாத், நவ. 3

பாகிஸ்தான் ஜனாதிபதிக்கான தேர்தலில் போட்டியிடும் முன்னாள் ஜனாதிபதி குலாம் இஷாக்கான் தமக்கு ஆளும் பாகிஸ்தான் மக்கள் கட்சியின் ஆதரவு கிடைக்கும் என்று நம்பிக்கை தெரிவித்தார்.

பி.பி. ஸிக்குஅளித்த பேட்டி ஒன்றில், பிரதமர் பெனாஸிர் பூட்டோவின் தலைமையிலான அரசில் அங்கம் வகிக்கும் முஸ்லிம் லீக்கின் ஒரு பிரிவினரின் உத்தியோகபூர்வ வேட்பாளராகத் தாம் போட்டியிடுவதாகவும் அவர் கூறினார்.

பெனாஸிரின் கட்சியில் இருந்து தமக்கு எதிர்ப்பு வரலாம் என்றும் அவர் தெரிவித்தார். [இ-எ]

## அமெரிக்காவில் பரவும் வன்செயல்கள்

வாஷிங்டன், நவ. 3

வன்செயல்கள் அமெரிக்காவில் ஒரு தொற்றுநோயாக பரவி வருவதாக வைத்திய நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

கடந்த ஆண்டில் மட்டும் 50 ஆயிரம் பேர் வரையில் வன்செயல்களால் அமெரிக்காவில் உயிரிழந்தனர் என்று தெரிவிக்கப்படுகிறது. (இ எ)

## தொழில்நுட்பப் பாடப் பொருட்காட்சி

யாழ்ப்பாணம், நவ. 3

காவெட்டி தெவரையாளி இந்துக் கல்லூரியில் தொழில் நுட்பப் பாடப் பொருட்காட்சி ஒன்று இன்று புதன் கிழமை காலை 9–30 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறும். [க]

## கல்வியறிவு இல்லாத 9கோடி அமெரிக்கர்கள்!

வாஷிங்டன், நவ. 3

பஸ் நேர அட்டவணையை வாசிக்கக்கூடிய அல்லது தொழில் சம்பந்தமாக ஒரு கடிதத்தை எழுதக்கூடிய அளவுக்குக் கூட கல்வியறிவு இல்லாத அமெரிக்கர்களும் அந்த நாட்டில் இருக்கிறார்கள்.

அப்படிப்பட்டவர்களின் எண்ணிக்கை 9 கோடி என்று அமெரிக்கக் காங்கிரஸ் நடத்திய ஆய்வு ஒன்றில் இருந்து தெரிய வந்துள்ளது.

வயது வந்த அமெரிக்கர்களில் அரைவாசியினர் கணிதத்தில் மிகவும் தரம் குறைந்து காணப்படுகின்றார்கள் என்றும் —

இதன் காரணமாக அவர்களால் நவீன வாழ்க்கை முறைக்குத் தேவையான அடிப்படை அலுவல்களைச் செய்து முடிப்பது கூட கஷ்டமாக உள்ளதாகவும் அந்த ஆய்வு கூறுகிறது.

''படிப்பறிவற்ற அமெரிக்கா'' என்ற தலைப்பில் ''ரைம்'' சஞ்சிகை இத்தகவலை வெளியிட்டுள்ளது. (ஒ–எ)

## அனுராவுக்கு ஆதரவான எம். பிக்கள் சுதந்திரக்கட்சியிலிருந்து விலகுவரா?

கொழும்பு, நவ. 3

அனுராவைத் தொடர்ந்து அவரின் ஆதரவாளர்களான சுதந்திரக் கட்சி எம். பிக்கள் அக்கட்சியில் இருந்து வெளியேறுவது பற்றிய உறுதியான தகவல்கள் ஏதும் வெளிவரக்வில்லை என்று கொழும்பு அரசியல் வட்டாரங்கள் தெரிவித்தன.

சுதந்திரக் கட்சியில் இருந்து வெளியேறும் அனுரா ஆதரவு எம். பிக்களுக்கு நாடாளுமன்றத்தில் இடமளிப்பதில் ஆளும் கட்சி எதிர்நோக்கும் பிரச்சினையே, இதற்குக் காரணம் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

அனுரா பண்டாரநாயக்கா கடந்த வெள்ளிக்கிழமை லண்டனில் இருந்து நாடு திரும்பிய போது கட்டுநாயக்கா விமான நிலையத்தில் ஜினதாஸா நியதபால, ஹலீம் இஸாக், பிரதீப் ஹப்பங்கம, எம். கே. டி. எஸ். குணவர்த்தனா, ஹேமகுமாதர நாணயக்கார, லயனல் ராஜபக்ஸ, டாக்டர் கமால் கருணநாயக்கா ஆகிய ஏழு சுதந்திரக் கட்சி எம். பிக்களும் அவரது ஆதரவாளர்களும் வரவேற்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ–எ-6)

## மரம்நடுகையில் மாநகரசபை தீவிரம்

மாரி காலத்தைப் பயன்படுத்தி யாழ். மாநகர சபையினர் மரநடுகையில் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர்.

கடந்த சில மாதங்களில் 236 மரங்களை நட்டுள்ள அதே சமயம், இம்மாதமும் அடுத்த மாதமும் மேலும் சுமார் 400 மரங்களை நடுவதற்கும் மாநகரசபையினர் முயற்சி செய்து வருகின்றனர். (ஒ–17)

# செவ்வாய்க் கிரகவாசிகளை 'ஒப்சேவர்' கண்டுபிடித்ததா?

செவ்வாய்க் கிரகத்தில் உள்ள மர்மத்தை வெளிப்படுத்த அமெரிக்க விண்வெளி ஆராய்ச்சிநிலையமான நாஸா 'ஒப்சேவர்' என்ற பெயரிலான விண்வெளிக் கோள் ஒன்றை அனுப்பிவைத்தது.

1976 க்குப் பின்னர் செவ்வாய்க் கிரகத்துக்குச் சென்று திரும்பி வரக்கூடியதாக அமெரிக்கா அனுப்பிவைத்த முதலாவது விண்வெளிக் கோள் இதுவாகும்.

இச்செவ்வாய்ப் பயணம் 72 கோடி டொலர் செலவில் மேற்கொள்ளப்பட்டது. ஒப்சேவர் விண்வெளிக் கோளில்

## மர்மத்தை அறிய அனுப்பப்பட்ட செயற்கைக்கோள் குறித்து மர்மம்!

பொருத்தப்பட்டிருந்த சக்தி வாய்ந்த தொலைநோக்கியின் மதிப்பு 150 கோடி டொலர் ஆகும்.

செவ்வாய்க் கிரகத்தின் ஈர்ப்பு வட்டத்தினுள் ஒப்சேவர் பிரவேசிப்பதற்காக அதன் வேகத்தைக் குறைக்கும் ரொக்கட்டை வெடிக்க வைப்பதற்கு 68 மணித்தியாலங்கள் இருக்கையில் —

கலிபோர்னியாவில் உள்ள நாஸாவின் ஆய்வுகூடத்தில் இருக்கும் தரைக் கட்டுப்பாட்டாளர்களுக்கு பேரிடியாக அத்தகவல் கிடைத்தது.

'ஒப்சேவர்' சேரன் திட்டமிட்டபடி தகவல் எதையும் அனுப்பவில்லை என்பதே அந்தகவலாகும்.

தரைக் கட்டுப்பாட்டாளர்கள் ஒப்சேவருடன் இருபது நிமிடங்களுக்கு ஒருதடவை தொடர்புகொண்டு பார்த்தனர். ஆனால் ஒப்சேவர் மௌனஞ்சாதித்தது.

கடந்த ஆகஸ்ட் நடுப்பகுதியில் இருந்து விஞ்ஞானிகள் ஆய்வுகூடத்தில் இருந்தவண்ணம் ஒப்சேவரின் செவ்வாய்ப் பயணத்தைக் காப்பாற்ற முயற்சித்தனர். பலன் கிடைக்கவில்லை.

ஒப்சேவருக்கு என்ன நடந்தது?

செவ்வாய்க் கிரகத்தையும் தாண்டி அது சென்றுவிட்டதா?

அதில் இருந்த எரிபொருள் தாங்கி வெடித்ததினால் அது சிதறிவிட்டதா?

— செவ்வாய்ப் பயணத் தரைக் கட்டுப்பாட்டாளர்கள் இக் கேள்விகளுக்கான பதில்களைக் காண தங்களுக்குள்ளே விவாதித்துக் கொண்டனர்.

இதனிடையில் — ஒப்சேவர் விண்வெளிக்கோள் எப்படி காணாமற் போனது. என்

**தீபன்ராஜா**

பதைக் கண்டறிய 'நாஸா' ஆராய்ச்சி நிலையத்தைச் சேராத நிபுணர்கள் குழு ஒன்றை 'நாஸா' தலைவர் டானியல் கோல்டின் நியமித்திருக்கிறார்.

இதேவேளை —

அமெரிக்காவின் நட்சத்திர யுத்தத் திட்டத்துக்காக அமைக்கப்படும் விண்வெளிக் கோள்களில் சிலவற்றை மீள் வடிவமைப்புச் செய்து செவ்வாய்க் கிரகத்துக்கு அனுப்ப முடியுமா என்று நாஸா தலைவர், அமெரிக்கப் பாதுகாப்பு அமைச்சைக் கேட்டிருக்கிறார்.

ஒப்சேவர் விண்வெளிக் கோள் தகவல்களை தரைக்கு அனுப்பமுடியாத நிலையில் இருப்பினும் அது சேதமடையாமல் அண்டவெளியில் தனது பயணத்தைத் தொடர்கிறது என்ற நம்பிக்கையும் நிலவுகிறது.

எனினும் —

பிரபஞ்சத்தில் இடம்பெறும் மாற்றங்களை அறிவதில் ஆர்வங் காட்டுபவர்கள் மத்தியில் இன்னொரு அபிப்பிராயம் நிலவுகிறது.

செவ்வாய்க் கிரகவாசிகளை ஒப்சேவர் விண்வெளிக்கோள் கண்டுபிடித்து விட்டது என்றும் —

அதனை உலகுக்கு மறைக்க ஒப்சேவர் விண்வெளிக்கோள் அண்டவெளியில் காணாமற் போய்விட்டது என்று நாஸா பாசாங்கு செய்வதாகவும் அந்த ஆர்வலர்கள் கூறுகின்றனர்.

செவ்வாய்க்கிரக மர்மத்தை கண்டுபிடிக்க அனுப்பப்பட்ட 'ஒப்சேவர்' விண்வெளிக்கோள் காணாமற் போனதிலும் ஒரு மர்மம் இருப்பதாக இப்போது தெரியவந்திருக்கிறது.

எப்படியிருப்பினும் —

செவ்வாய்க் கிரக மாற்றம் சிலருக்கு நன்மையும், சிலருக்கு தீமையும் அளிக்கலாம். இன்னும் சிலருக்கு சமபலனையும் அளிக்கக்கூடும். ஆனால் செவ்வாய்ப் பயணத்தை மேற்கொண்ட ''ஒப்சேவர்'' விண்வெளிக்கோள் காணாமற் போனது அமெரிக்க விண்வெளி ஆராய்ச்சி நிலையமான 'நாஸா' வின் தலைவிதியை அதன் எதிர்காலத்தை நிர்ணயிக்கலாம் என்று நியூஸ்வீக் எச்சரித்து உள்ளது. ★

*சூரியனில் இருந்து பதினான்கு கோடியே 10 லட்சம் மைல்கள் தொலைவில் உள்ள நான்காவது பெரிய கிரகம் செவ்வாய் ஆகும்.*

*செவ்வாயைச் சுற்றி போபோஸ் மற்றும் டெய்மோஸ் என்ற பெயர்களில் இரண்டு உபகிரகங்கள் உள்ளன.*

*செவ்வாயின் குறுக்களவு 6 ஆயிரத்து 787 கிலோ மீற்றர் ஆகும்.*

*செவ்வாயின் தோற்றத்தை படம் பிடித்து முதன்முதலாக 1964 இல் அமெரிக்காவின் மரைனர்-4 விண்கலம் பூமிக்கு அனுப்பியது. 1969 ஆம் ஆண்டில் மரைனர் — 6, 7 விண்கலங்களும் செவ்வாயின் பல தோற்றங்களை படம் பிடித்து பூமிக்கு அனுப்பின. ஆனால் அவ்விண்கலங்கள் செவ்வாயை அதன் சுற்றுப் பாதையில் வலம் வரவில்லை.*

*மரைனர் 9 விண்கலமே 1971 இல் செவ்வாயை வலம் வந்தது.*

*1970 களில் அமெரிக்காவின் இரண்டு வைக்கிங் விண்கலங்கள் செவ்வாய் மற்றும் அதன் உபகிரகங்களான போபோஸ், டெய்மோஸ் ஆகியவற்றை விரிவாக ஆராய்ந்து படம் பிடித்து பூமிக்கு அனுப்பின.*

**நம் நாடு உயர்வாகும் நாடெல்லாம் பயிர் செய்தால்**

அரிய சந்தர்ப்பம்!

### ❊ தீபாவளி மலிவு விற்பனை ❊

நவம்பர் 1-ஆம் திகதி முதல் 12-ஆம் திகதி வரை

சகலவிதமான கைக்கடிகாரங்கள், சுவர்மணிக்கூடுகள் முதலியன மலிவு விலையில் பெற்றுக் கொள்ளலாம்.

## அல்டி

269/1, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

(சி-6511)

## புனித சாள்ஸ் மகாவித்தியாலய தினம்

04 — 11 — 1993

யா/ புனித சாள்ஸ் மகாவித்தியாலய தினமான நாளை 04 - 11 - 1993 அன்று யாழ். மரியன்னை பேராலயத்தில் காலை 8. 30 மணிக்கு நடைபெறும் திருப்பலியிலும் அதன்பின்னர் பாடசாலையில் நடைபெறும் ஒன்றுகூடல் நிகழ்ச்சியிலும் கலந்து கொள்ளுமாறு இப்பாடசாலையின் பழைய மாணவர்களை அன்புடன் அழைக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள்,
பாடசாலை அபிவிருத்திச் சங்க
உறுப்பினர்கள்.

(27880)

சாவகச்சேரி ப. நோ. கூ. சங்கம்
சாவகச்சேரி.

## வர்த்தக முகாமையாளர் பதவிக்கான விண்ணப்பம் கோரல் [106/8]

சம்பள அளவுத்திட்டம்
1005 — 1705
40 X 5 — 50X10

(அத்துடன் கூட்டுறவு வேலையாளர் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட படிகளும்)

மேற்படி பதவிக்கு கீழ்வரும் தகைமையுடைய ஆண் பாலர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் சொந்தக் கையெழுத்தில் பூர்த்திச் செய்து கல்விச் சான்றிதழ், பிறப்பு அத்தாட்சிப் பத்திரம், அனுபவச் சான்றிதழ், வதிவிடச் சான்றிதழ் ஆகியவற்றின் பிரதிகளுடன் ''பொது முகாமையாளர், சாவகச்சேரி ப.நோ.கூ.சங்கம், சாவகச்சேரி'' என்ற விலாசத்திற்கு 21 – 11 – 1993 அன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபாலிலோ அல்லது நேரிலோ சமர்ப்பித்து உறுதிப்படுத்தவும்.

மேலதிக விவரங்கள் தேவைப்படின், சங்கக் காரியாலயத்தில் பார்வையிடலாம்.

கல்வித் தகைமை:

I. கூட்டுறவுப் பணியாளரின் 9 ஆவது சம்பளத் திட்டத்தில் முகாமை அல்லது மேற்பார்வை மட்டத்திலான பதவியில் மூன்று வருடங்களுக்குக் குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவுப் பணியாளர் 10 ஆவது சம்பளத் திட்டத்தில் சம்பந்தப்பட்ட துறையிலான பதவியில் 6 வருடங்களுக்குக் குறையாத அனுபவம்.

அல்லது

II. வர்த்தக / தொழிற்துறை ஸ்தாபனம் ஒன்றின் முகாமை மட்டத்திலான பதவியும், அங்கீகரிக்கப்பட்டபல்கலைக்கழகம் ஒன்றின் பட்டதாரி.

அல்லது

III. கூட்டுறவுப் பணியாளர் தராதரப் பத்திரம் (உயர்தரம்) / க. பொ. த (உயர்தரம்) 3 பாடங்களிலான சித்தியுடன் சந்தைப் படுத்தல் / வழங்கல்/பொருள் விநியோகம் பொருள்களின் இறக்குமதி / ஏற்றுமதி என்ற துறைகளில் வர்த்தக / தொழிற்துறை ஸ்தாபனம் ஒன்றின் 4 வருடங்களுக்குக் குறையாத அனுபவம்.

2. வயது: 23 - 40

3. நிபந்தனைகள்:

அ) விண்ணப்பத்தாரர் 2 வருடங்களுக்கு மேல் யாழ். மாவட்டத்தில் வசிப்பவராக இருத்தல் வேண்டும்.

ஆ) சங்க எல்லைப் பரப்பில் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

இ) ஆங்கிலம் அல்லது சிங்களம் பேச, எழுத, வாசிக்க தெரிந்திருத்தல் விரும்பத்தக்கது.

ஈ) சங்கத்தால் நிர்ணயிக்கப்படும் பிணைப்பணம் செலுத்த தயாராக இருத்தல் வேண்டும். (ரொக்கம், ஆதனம்)

உ) தெரிவு செய்யப்படுபவர் தொடர்ந்து மூன்று வருட காலத்தில் கடமை புரிவதற்காக சம்பந்த பத்திரத்தில் கையெப்பமிடல் வேண்டும்.

ஊ) விண்ணப்பபடிவத்துடன் கல்விச் சான்றிதழ், அனுபவச் சான்றிதழ், வதிவிட அத்தாட்சிப் பத்திரம், பிறப்புச் சான்றிதழ், அண்மையில் பெற்ற இரு நற்சான்றிதழ்கள் ஆகியவற்றின் பிரதி இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

குறிப்பு:-

★ சங்கப் பணியாளருக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

பொதுமுகாமையாளர்,
சாவகச்சேரி. ப. நோ. கூ. சங்கம்,
சாவகச்சேரி.

30 – 10 – 1993. (சி/6508)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யுனிசெவ்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
சினைகள் குறித்தும் எடுத்து உரைக்கப்பட்டது.

யுனிசெவ் பிரதிநிதிகள் அர சாங்க அதிபருடனும் பல்வேறு வசதிக் குறைவுகள் குறித்தும் ஆராய்ந்தனர்.

(அ-3-5-162)

# மரண அறிவித்தல்கள்

## சிற்றம்பலம் சோமாஸ்கந்தன்

காரைநகர் மருதடியைப் பிறப்பிடமாகவும் மன்னாரை வதிவிடமாகவும் கொண்ட சிற்றம்பலம் சோமாஸ்கந்தன் (முன்னாள் புகையிரத திணைக்கள ஊழியர்) 31 - 10 - 93 இல் மன்னாரில் காலமானார்.

இவர் சிற்றம்பலம் (ஓய்வுபெற்ற தலைமை ஆசிரியர்) திருமதி செல்லம்மா சிற்றம்பலம் ஆகியோரின் அன்பு மகனும், திருமதி ஜெகதீஸ்வரியின் அன்புக் கணவரும், ஜெயகாந்தன், ஜெயக்குமார், ஜெயபாரதி, ஜெயரூபன், ஜெயசசன் ஆகியோரின் அன்புத் தந்தையும், மன்னார் பிரபல வர்த்தகர் மயில்வாகனத்தின் அன்பு மருமகனும்' திருமதி ஞானாம்பிகை பரம்ஜோதி (ஆசிரியை, நோர்வூட்), திருமதி புனிதவதி ஜெகநீசன் (இளைப்பாறிய ஆசிரியை, கொழும்பு), திருமதி மங்கையர்க்கரசி தவலிங்கம் (வருமான வரித் திணைக்களம், கொழும்பு), திருஞானசம்பந்தன் (பொறியியலாளர், அமெரிக்கா), திருமதி பிரபராம்பாள் மார்க்கண்டு (கல்வயல், சாவகச்சேரி), சச்சிதானந்தம் (பொறியியலாளர், கனடா), திருநாவுக்கரசு (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரருமாவார்.

அன்னாரின் இறுதிச் சடங்குகள் 2-11-1993 இல் மன்னாரில் நடைபெற்றன இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறோம்.

அன்னாரின் துக்க அனுஷ்டானம் அவரது சகோதரி திருமதி பிரபராம்பாள் மார்க்கண்டு அவர்களின் இல்லத்தில் நடைபெறும்.

தகவல்:
மார்க்கண்டு
(மைத்துனர்)
திருமதி செல்லம்மா சிற்றம்பலம்
(தாயார்)

பெரும்குளம் பிள்ளையார் கோவில் வீதி,
கல்வயல்,
சாவகச்சேரி.

(27882)

திருமதி

## சிவபாலசுப்பிரமணியம் பரமேஸ்வரி

சுன்னாகத்தைச் சேர்ந்த திருமதி சிவபாலசுப்பிரமணியம் பரமேஸ்வரி 2-11-93 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற திரு திருமதி கந்தவனத்தின் ஏக புத்திரியும், திரு. சிவபாலசுப்பிரமணியத்தின் (இளைப்பாறிய ஹட்டன் நஷனல் வங்கி முகாமையாளர்) அன்பு மனைவியும், கலாநிதி பாலசுப்பிரமணியத்தின் (M. Sc கனடா) அன்புச் சகோதரியும், சிவஞானசுந்தரம், காலஞ்சென்ற சிவசங்கரநாதன், திருமதி சரஸ்வதி (கனடா) ஆகியோரின் மைத்துனியும், திருமதி சிவபூரணத்தின் சகலியும், திருமதி லோகேஸ்வரி (U.K), செல்வி விக்னேஸ்வரி, செல்வன் தம்பு (U.K), செந்தில்நாதன், ஸ்ரீநாதன், ஸ்ரீசங்கர், ஸ்ரீகுமரன் ஆகியோரின் பெரிய தாயாரும், செல்வன் பாலசரவணபவன் (கனடா), பாலசரஸ்வதி (கனடா), திரு. விநாயகமூர்த்தி (U.K) ஆகியோரின் மாமியாரும், கவிலோன் (U.K), யசிக்கா (U.K) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 2-11-93 (செவ்வாய்க்கிழமை) இவரது இல்லத்தில் நடைபெற்றன. இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
த.சிவபாலசுப்பிரமணியம்
(கணவன்)

''பொன் இல்லம்''
கே. கே. எஸ். வீதி,
சுன்னாகம்.

(6711)

திருமதி

## றோஸ் அழகமலர் இராஜரட்ணம்

திருமதி றோஸ் அழகமலர் இராஜரட்ணம் 28-10-93 இல் காலமானார். அன்னார் ஓர்தர் இராஜரட்ணத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற வசந்தா இந்திரன், பிரேமாதனபாலன், சுரேன், நிர்மலா கொஸ்மஸ், நேசன், ரஜீ ஆகியோரின் அன்புத் தாயாருமாவார். நல்லடக்க ஆராதனை 31-10-93 இல் கொழும்பில் நடைபெற்றது. உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

தகவல்
சி.தனபாலன் (மருகர்)
அதிபர்
பரியோவான் கல்லூரி

3-11-93
யாழ்ப்பாணம்.

(சி/6311)

## திருமதி தருமராசா சிவரூபவதி

நயினாதீவு 3 ஆம் வட்டாரத்தை பிறப்பிடமாகவும், 63/1 கே. கே. எஸ். வீதி கொக்குவிலை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தருமராசா சிவரூபவதி 02-11-93 இல் கொழும்பில் காலமானார்.

இவர் காலஞ்சென்ற சண்முகநாதன் - சிவபாக்கியம் தம்பதிகளின் அன்பு மகளும், கதிரித்தம்பி - மாணிக்கம் தம்பதிகளின் அருமை மருமகளும், வினோதினி, சிறிகாந்த், சதீஸன், உஷாந்தினி, கஜயவதனி ஆகியோரின் பாசமிகு தாயாரும், காலஞ்சென்ற ஸ்ரீஸ்கந்தராசா, கோகுலராசா, காலஞ்சென்ற தனஞ்செயராசா, பத்மலோசனி, ருகுணாவதி, நாகம்பிகை, தங்கராசா ஆகியோரின் அன்புச் சகோதரியும், கிரிஜாம்பாள், ஜெயந்தி, சபாநாதன், தில்லைநாதன், சிவலிங்கம், அகிலாண்டநாயகி, குணநாயகி, உதயநாயகி, புஸ்பராசா ஆகியோரின் அன்பு மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை கொழும்பில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்
க. தருமராசா
(கணவர்)
A.M.R கடைக் கணக்காளர்,
திருநெல்வேலிச் சந்தி.

3/1, கே.கே.எஸ் வீதி,
கொக்குவில்.
(27884)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிடெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 291/2 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 03 - 11 - 1993 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

## இன்று

1992 ஜி. சி. ஈ. ஏப்ரல் உயர்தர விசேட பரீட்சைக்குத் தோற்றிப் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கான ஆலோசு கலந்துரையாடல் ஒன்று இன்று புதன்கிழமை காலை 9. 30 மணியளவில் யாழ். இந்துக் கல்லூரியில் நடைபெறும்.

★ ★ ★

முன்னாள் ஸ்கந்தவரோதயக் கல்லூரி அதிபர் ப. விக்னேஸ்வரனின் சேவை நலம் பாராட்டும், புதிய கொத்தணி அதிபர் ஆ. கமலநாதனின் வரவேற்பு விழாவும் இன்று பிற்பகல் 1 மணிக்கு ஸ்கந்தவரோதயக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறும்.

★ ★ ★

தெல்லிப்பளை யூனியன் கல்லூரி கனிஷ்ட இடைநிலைப் பிரிவு மாணவர்களின் கையெழுத்துப் பிரதிகள் வெளியீட்டு விழா இன்று நடைபெறும்.

(த-டி-5)

★ ★ ★

திருநெல்வேலி பகுதியில் இருந்து தெரிவு செய்யப்பட்ட சுமார் 30 யுவதிகளுக்கான தையல் பயிற்சி நெறி இன்று மகளிர் அபிவிருத்தி நிலையத்தால் ஆரம்பிக்கப்படவுள்ளது. மேலதிக அரச அதிபர் திருமதி பத்தினியம்மா திலகநாயகம்போல் பயிற்சிநெறியினை ஆரம்பித்து வைப்பார்.

★ ★ ★

வயாவிழான் குட்டியபுலம் அ.த.க. பாடசாலையின் வருடாந்த பரிசளிப்பு விழா இன்று பிற்பகல் 2 மணிக்கு புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தாக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறும்.

## காலமானார்

பிரபல சமூக சேவையாளரும் இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ். கிளையின் போஷகரும் குழந்தை வைத்திய நிபுணர் டாக்டர் எஸ். சண்முகலிங்கத்தின் துணைவியாருமான திருமதி சோமகலாவல்லி சண்முகலிங்கம் (வயது 58) நேற்று இரவு யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் காலமானார்.

யாழ்ப்பாணம் நாவலர் வீதியில் அவரது இல்லத்தில் இறுதிக்கிரியைகள் நடைபெறும்.

## விளையாட்டு நிகழ்வுகள்

யாழ்ப்பாணக் கல்விக் கோட்டத்தினால் நடத்தப்படும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இரு அரை இறுதி ஆட்டங்கள் இன்று மாலை 3. 15 மணி முதல் கொக்குவில் இந்து மைதானத்தில் நடைபெறும்.

15 வயதுப் பிரிவில் யாழ். இந்து அணியை எதிர்த்து கனகரத்தினம் ம.ம.வி. அணி மோதும்.

19 வயதுப் பிரிவில் கனகரத்தினம் ம.ம.வி. அணியை எதிர்த்து நாவாந்துறை றோ. க. வி. மோதும்.

(உ-20)

★ ★ ★

யாழ். மாவட்ட பாடசாலைகள் விளையாட்டு விழா தொடர்பாக நடைபெறும் போட்டிகளில், ஆசிரியர்களுக்கான மேசைப்பந்துச் சுற்றுப் போட்டி சுண்டுக்குழி வை. எம். சி. ஏ. உள்ளரங்கிலும் —

மாணவர்களுக்கான மாவட்ட இறுதிநிலை சதுரங்க சுற்றுப்போட்டி யாழ். இந்துக் கல்லூரியிலும் — நாளை காலை 8 மணிக்கு ஆரம்பமாகும்.

## மகாபொல கொடுப்பனவு 1991/92

முதலாம் வருட மாணவர்களுக்கான 5 ஆம் தவணைப் பணமும் ஏனைய வருட மாணவர்கட்கான 10 ஆம் தவணைப்பணமும் யாழ். பல்கலைக்கழகத்தில் அமைந்துள்ள மக்கள் வங்கி நவீன சந்தைக் கிளையில் கொடுப்பனவு மேற்கொள்வதற்கான ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன. கொடுப்பனவுகளுக்கான நேரசூசிகை பல்கலைக்கழக விளம்பரப் பலகைகளில் இடப்பட்டுள்ளது.

- பதிவாளர்.

(சி/6309)

## அரசு போரில்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
தமிழரின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கு அரசியல் தீர்வு அவசியமாகும்.

முன்னைபோலன்று இப்போதும் அரசியல்வாதிகள் சொந்த அரசியல் லாபத்துக்காக இனவாதத்தை பயன்படுத்தி வருகின்றனர். இதனால் தமக்கு விமோசனம் கிடைக்காது என்று தமிழ் மக்கள் சிந்திக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். அதனால் அவர்கள் அரசியல் மார்க்கத்தைக் கைவிட்டு ஆயுதப் போராட்டத்தில் இறங்க வேண்டியதாயிற்று.

ஜனாதிபதியும் அவரது கட்சியினரும் விடுதலைப் புலிகளுக்கு எதிரான சக்திகளைப் பகைத்துக் கொண்டுள்ளனர்.

இனப்பிரச்சினை உண்டு எனக் கூறி, அதற்கான அரசியல் தீர்வைக்கான பேச்சு வார்த்தை மேற்கொள்ளப்படல் வேண்டும்.

தமிழர்களுக்கு நீதி வழங்கப்பட வேண்டும். அதிகாரங்கள் பன்முகப்படுத்தப்படல் வேண்டும். தமிழரின் பிரச்சினைக்கு தீர்வு காணக்கூடியதான தீர்வாக முறை ஒன்று வகுக்கப்பட வேண்டும். இக்கருத்துக்களை சுதந்திரக் கட்சி கொண்டிருக்கிறது.

— இவ்வாறு அவர் மேலும் தெரிவித்தார். (உ-எ-6)

## மனித...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
மனித உரிமைகளை மீறும் வகையில் அமைந்துள்ளன என்றும் அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சர்வதேச மனித உரிமைகள் சாசனத்துடன் ஒத்துப்போகாத பயங்கரவாத தடுப்புச் சட்டம் போன்றவற்றை நீக்குதல், தடுப்பு முகாம்கள், சித்திரவதைக் கூடங்கள், சட்டவிரோத ஆயுதக் குழுக்களை கலைத்து விடுதல், கைது மற்றும் தடுத்து வைத்தல் தொடர்பான விவரங்களை உறவினருக்கு வழங்குதல் மனித உரிமைகள் கட்டுப்பாட்டுப் பிரிவுக்கு இது பற்றித் தெரியப்படுத்தல் போன்ற நடவடிக்கைகளை உடன் மேற்கொள்ளுமாறும் ஸ்ரீ லங்கா அரசை இவ்வமைப்பு வலியுறுத்தியுள்ளது.

தமிழர் மீதான கெடுபிடி நடவடிக்கைகளில் ஈடுபடுவதாக குற்றஞ்சாட்டி ஸ்ரீலங்கா அரசை சர்வதேச மன்னிப்புச் சபையும் கண்டித்திருந்தது தெரிந்ததே. (உ-த)

## கண்ணகி...

(2ஆம் பக்கத் தொடர்ச்சி)
ஊழ்வினை வசத்தினாலே கோவலன் கண்ணகியைப் பிரிந்து மாதவி என்னும் விலைமாதுடன் வாழ்ந்து வருகிறான். சகல செல்வங்களையும் இழந்துவிட்ட கோவலன் மாதவியைப் பிரிந்து மீண்டும் கண்ணகியிடத்திற்கு வருகிறான்.

இருவரும் பொருள்தேட மதுரைப்பதிக்கு வருகிறார்கள். கண்ணகியின் காற்சிலம்பை விற்பதற்கு கோவலன் மதுரை வீதியில் செல்கிறான். இதனைக் கண்ட பொற்கொல்லன் ஒருவன் சிலம்பை அரசனுக்கு விற்கலாம் என்று வஞ்சனையுடன் கூறி கோவலனை அழைத்துச் செல்கிறான்.

அரசனிடம் கோவலனைக் காட்டி, அவன்தான் அரசியின் சிலம்பைத் திருடியவன் என வஞ்சனையாகக் கூறினான். அரசனும் தீரவிசாரியாமல் கோவலனை கொலை செய்து விடுகிறான். தனது கணவன் கொலையுண்டதை அறிந்த கண்ணகி அரசசபைக்கு வந்து நீதி கேட்கிறாள். தவறு செய்த அரசனையும் அரசியையும் தண்டித்து மதுரையையும் எரித்து விட்டு கற்புடைத் தெய்வமாக மாறிவிடுகிறாள்.

கண்ணகியின் வரலாறு மூன்று கருத்துக்களை மக்களுக்கு உணர்த்துகிறது. ஒன்று மன்னன் நீதி தவறும்போது, அந்த நீதிதேவனே அவனைத் தண்டிப்பான் என்பது. இரண்டாவது, கற்புடையவள் தெய்வமாக மதிக்கப்படுகிறாள் என்பது. ஊழ்வினை தொடர்ந்து வந்து உறுத்தும் என்பது மூன்றாவதாகும்.

இறைவியினுடைய ஒரு அம்சம்தான் கண்ணகிதேவி என்பதை இந்த வரலாறு எமக்கு விளக்குகின்றது.

★

## தொண்டர் ஆசிரியர்களின் கவனத்திற்கு

அனைத்துத் தொண்டராசிரியர்களும் தங்களது சுயவிவரக் கோவை தயாரிக்கப்படவுள்ளதால் 4-11-93 வியாழக்கிழமை காலை 9-00 மணிக்கு, பட்டப்படிப்புகள் கல்லூரி, 148/1, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் உள்ள நிலையத்துக்கு சமுகந் தரவும்.

நிர்வாக சபைக் கூட்டம் 03-11-93 புதன்கிழமை காலை 9-00 மணிக்கு நடைபெறவுள்ளதால் நிர்வாக சபை உறுப்பினர்கள் தவறாது சமுகந்தரவும்.

நன்றி.

தலைவர்:
சி. நல்லகுமார்

(6579)

## G. A. Q. 94/95

(பொதுக் கலைப் பட்டதாரிக்கு[illegible])

★ A/L இல் 3 பாடங்கள் (கலை, வர்த்தக, விஞ்ஞானம்) சித்தியடைந்தவர்களும் பயிற்றப்பட்ட ஆசிரியர்களும் விண்ணப்பிக்கலாம்.

★ இதற்கான பல்கலைக்கழகப் பதிவுகள் நிறுவனத்தினால் செய்து தரப்படும்.

★ இதற்கான விரிவுரைகள்

**ஆரம்பம்: 07 - 11 - 1993**
ஞாயிறு காலை (10 மணி)

★ விண்ணப்பப்படிவங்களையும் விவரங்களையும் நேரில் பெற்றுக் கொள்ளவும்.

விவரங்களுக்கு:
ஸ்ரீ. அருள் நங்கை

**புதிய உயர் கல்லூரி,**
ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.

(சி-6522)

## கண்ணீர் அஞ்சலி

யா / கொக்குவில் ஸ்ரீ இராமகிருஷ்ண. வித்தியாசாலை பிரதி அதிபர் திருமதி. இ. ஸ்ரீ காந்தன் அவர்களின் அன்னையார் 30- 10- 93 அன்று இறைபதம் எய்தியமையையிட்டு அன்னாரது குடும்பத்திற்கு எமது கண்ணீர் அஞ்சலிகளை தெரிவித்துக்கொள்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள்,
மாணவர்கள்
கொக்குவில் ஸ்ரீ இராமகிருஷ்ண வித்தியாசாலை.

## முதலாவது பிறந்த தின வாழ்த்து

(03 — 11 — 1993)

### செல்வன் யோ. ஜீவகன்

சுன்னாகம், காசி வீதியில் வசிக்கும் யோகராஜா- பூங்கொடி தம்பதிகளின் செல்வப் புதல்வன் ஜீவகன் தனது முதலாவது பிறந்த நாளை இன்று (03-11-93) புதன்கிழமை தனது இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடுகிறார்.

ஜீவகனை அப்பா, அம்மா, அம்மம்மா, தாத்தா, அன்ரா, சித்தி, சுவீடன் மாமா, நோர்வே மாமா, மற்றும் அப்பம்மா, சித்தப்பா, வசிகர் மாமா, மலர்விழி, மாங்கனி, சிவா மாமா, டென்மார்க் மாமி, மாமா மற்றும் உறவினர்கள் இறைவன் அருளால் சீரும், சிறப்பும் பெற்று வாழ வாழ்த்துகிறார்கள்.

(27879)


## உடனடி வேலை வாய்ப்பு

தென்மராட்சியில் இயங்கும் சைவ, அசைவ உணவகத்திற்கு பின்வருவோர் தேவை.

1. சுவையான சைவ, அசைவ உணவு வகைகள் தயாரிக்கக் கூடியவர்கள்
2. சுவையான புரியாணி, கொத்து ரொட்டி தயாரிக்கக் கூடியவர்கள்.

★ உங்கள் அனுபவத்தைக் குறிப்பிட்டு [illegible] விண்ணப்பிக்கவும்.

விண்ணப்ப முடிவு திகதி: 26 — 11 — 1993

விண்ணப்பிக்கும் முகவரி:

**VIMALAS**
9-15, MODERN MARKET,
CHAVAKACHCHERI.

(27877)


நெஞ்சம் நெகிழும்

## 31ஆம் நாள் நினைவில்

யா/உடுவில் முருகமூர்த்தி வித்தியாசாலையில் எம்முடன் கடமையாற்றும் ஆசிரியையாகிய திருமதி க. நடராஜன் அவர்களின் அன்புக்கணவராகிய

### திரு. பொ. இரா. நடராஜன்

[மானிப்பாய் விவேகானந்தா வித்தியாசாலையின் ஓய்வு பெற்ற அதிபர்]

அவர்களின் மறைவால் துயருறும் குடும்பத்தார் உறவினருடன் எங்கள் துயரங்களையும் அனுதாபங்களையும் பகிர்ந்து கொள்வதுடன் அமரரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

யா/உடுவில் முருகமூர்த்தி வித்தியாசாலையின்
அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்.

[6578]

## முதலாம் ஆண்டு நினைவலைகள்



### அ. ஸ்ரீ சக்கரமேன்தாஸ்

அன்னையின் உதிரத்தில்: **15 — 04 — 1954**
உதிர்வின் அணைப்பில்: **03 — 11 — 1992**

''உயிர்ப்பும் உயிரும் நானே என்னில் விசுவாசம் கொள்பவன் இறப்பிலும் வாழ்வான்''

அன்பிற்கோர் இருப்பிடமாய்
அன்னை மடியில் தவழ்ந்திருந்தாய்
குடும்பத்தின் குலவிளக்காய்
குவலயம் போற்ற நீ வாழ்ந்திருந்தாய்
உறவின் பாலங்கள் நீயமைத்து
உண்மை அன்பை வளர்த்திருந்தாய்
அன்னை உன்னைத் தேடுகிறேன்
அன்பு முகம் காட்டாயோ............?

உறவுக்காக ஏங்கி நிற்கும்:
அம்மா, அம்மப்பா, அம்மம்மா.

முள்ளி வீதி,
அரியாலை.

(27874)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org